புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com




திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • சனவரி(JANUARY), 29 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 5 • விலை(PRICE) ரூ.6.00

## துணை மருத்துவப் படிப்புகளுக்கும் நீட் தேர்வா?

### தமிழ்நாடு ஏற்காது! எதிர்த்து வெல்லும்!

‘அலைடு ஹெல்த்’ எனப்படும் துணை மருத்துவப் படிப்புகளுக்கும் ’நீட்’ தேர்வு கட்டாயம் என்று அறிவித்திருக்கிறது தேசிய துணை மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகள் ஆணையம் (என்.சி.ஏ.எச்.பி).

எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ், மற்றும் படிப்புகள் அனைத்திற்கும் தமிழ்நாட்டின் கடும் எதிர்ப்பையும், கல்வி பொதுப்பட்டியலில் உள்ள அரசியலமைப்பு நியதிகளையும் மீறி நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கிராமப்புற ஏழை- எளிய மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைத்து, மருத்துவக் கட்டமைப்பை பலவீனப்படுத்தும் நீட் தேர்வு கூடாது என்று தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு. இந்நிலையில் மருத்துவ துணைப் படிப்புகளுக்கும் நீட் தேர்வு என்பது மோசடியானது. நீட் தேர்வில் வெற்றி பெற முடியாதவர்களின் அடுத்த கட்ட மருத்துவக் கனவாக துணை மருத்துவப் படிப்புகள் உதவுகின்றன.

குறிப்பாக பி.எஸ்சி, பிசியோதெரபி, ஆக்குபேஷனல் தெரபி, மருத்துவஆய்வகத் தொழில்நுட்பம், ரேடியாலஜி, ஆப்டோமெட்ரி, டயாலிசிஸ் உட்பட 56 வகை படிப்புகள் துணை மருத்துவப் படிப்புகள் கற்பிக்கப்படுகின்றன. இவற்றுக்கு நீட் தேர்வு கிடையாது. பனிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மாணவர்கள், இதில் எதாவது ஒரு பாடத்தை எடுத்து படிக்கலாம்.

இந்நிலையில், 2023-இல் நர்சிங் படிப்பையும் நீட் தேர்வின் கீழ் கொண்டு வர ஒன்றிய அரசு திட்டமிட்டது. ஆனால் ‘இது மாநில திட்டத்திற்கானது’ என்று தமிழ்நாடு அரசு அப்போதே மறுப்பு தெரிவித்ததால் ஒன்றிய அரசு அம்முயற்சியைக் கைவிட்டது.

தற்போது 2026 – 27 கல்வியாண்டு முதல் பிசியோதெரபி, ஆக்குபேஷனல் தெரபி உட்பட பல்வேறு துணை மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கு நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தேசிய துணை மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகள் ஆணையம் இதற்கான அறிவிப்பை வெளியிட்டதற்கு தமிழ்நாட்டில் அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் கடும் கண்டனம் எழுந்துள்ளது. துணை மருத்துவப் படிப்புகளை தேர்ந்தெடுப்போரில் 90% பேர் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள். இதற்கும் தேசிய அளவில் நீட்தேர்வு தேவையென்றால் தனிப்பயிற்சிக்கு கட்டணம் செலுத்தி படிக்க வேண்டும். பணம் கட்டி பயிற்சி பெற முடியாத கிராமப்புற, ஏழை மற்றும் அரசுப் பள்ளி மாணவர்கள் இந்த படிப்பையும் படிக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

## தாய்மை புனிதம் உடைகிறது!

பாஜக ஆளும் வடமாநிலங்களான உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் மக்கள்தொகை ஒருபக்கம் கட்டுக்கடங்காமல் அதிகரித்து வந்தாலும், கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் முன்னேறும் மாநிலங்களில் பழமைவாத சிந்தனைகள், பிற்போக்குத்தனங்கள் உடைந்து நொறுங்கிக் கொண்டிருக்கின்றன என்பதையும் காண முடிகிறது. கல்வியில், பொருளாதாரத்தில், வேலைவாய்ப்பில் முன்னேறாத மாநிலங்களில் பெண்கள் எத்தனை முறை கருவுற்றாலும் குழந்தை பெற்றுக்கொண்டே ஆக வேண்டுமென்ற சமூக அநீதியை சுமக்க நேரிடுகிறது. அதுதான் மக்கள்தொகைப் பெருக்கத்திற்கும் காரணமாகிறது. ஆனால் கல்வியில் முன்னேறி வரும் மாநிலங்களில் பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்ளலாமா, வேண்டாமா அல்லது பின்னர் அதுகுறித்து முடிவெடுத்துக்கொள்ளலாமா என்று சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்தியாவில் மருத்துவ ரீதியாக பதிவு செய்யப்படும் கருக்கலைப்புகளின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளில் கணிசமாக உயர்ந்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் (2021-2025) வழக்கத்தை விட, கருக்கலைப்புகள் 67% உயர்ந்துள்ளது என்று ஆய்வுகள் தெரிவிப்பதே இதை உறுதிப்படுத்துகிறது. ஒப்பீட்டளவில் மகாராஷ்டிரா, தமிழ்நாடு, தெலங்கானா போன்ற மாநிலங்களில்தான் அதிகளவு கருக்கலைப்புகள் பதிவு செய்யப்படுகிறது. தேசிய சுகாதார புள்ளி விவரங்களின் படி தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் சராசரியாக 65ஆயிரம் கருக்கலைப்புகள் நடக்கின்றன. கடந்த 2021-ஆம் ஆண்டு முதல் கடந்தாண்டு (2025) ஜூன் மாதம் வரை 19 வயதிற்கு மேல் உள்ள பெண்கள் 3 லட்சத்து 28 ஆயிரத்து 970 பேருக்கு கருக்கலைப்பு செய்யப்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் ஒப்பிடும் போது கருக்கலைப்பில் முதல் இடத்தில் சென்னையும், இரண்டாம் இடத்தில் சேலமும், 3-ஆம் இடத்தில் ஈரோடு மாவட்டமும் உள்ளது.

இத்தகைய கருக்கலைப்புக்கான காரணங்கள் பற்றி குறிப்பிடும் மருத்துவர்கள், “பாலியல் பாதிப்புக்கு உள்ளானவர், குழந்தை பெற்றெடுக்கும் அளவுக்கு பெண்ணுக்கு உடல் தகுதி இல்லாத சூழல், வளரும் கருவில் உள்ள சிசு ஆரோக்கியமின்மை, கர்ப்பமடைந்த பெண்ணின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளிட்ட முக்கிய காரணங்களுக்காக கருக்கலைப்பு செய்யப்படுகிறது. இதுதவிர்த்து சமூக பொருளாதார காரணங்களால் குழந்தை பிறப்பை சிலர் தள்ளி வைக்கும் சூழல் காணப்படுகிறது. குறிப்பாக திருமணத்திற்கு பிறகு குழந்தை பிறப்பை தள்ளிப்போட விரும்புகின்றனர். இரண்டு குழந்தைகள் வைத்துள்ளவர்கள் குடும்ப சூழல், பொருளாதார காரணங்களாலும் கருக்கலைப்பு செய்கின்றனர்” என்கின்றனர். ஆக, கருத்தரித்துவிட்டாலே குழந்தை பெற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும் என்று கட்டாயத்தின் பிடியில் இருந்து தமிழ்நாட்டுப் பெண்கள் வேகமாக வெளியேறி வருகிறார்கள். தாய்மை என்ற போர்வையில் பெண்களின் மீது புனிதத்தை திணித்து, உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் எதிர்கொள்ள வேண்டிய அழுத்தங்கள் உடைபடத் தொடங்கியிருக்கின்றன என்பதை இத்தரவுகள் மெய்ப்பிக்கின்றன.

## மதவெறிக் காடாகிறதா ஒடிசா?

ஒடிசாவின் தேன்கனல் மாவட்டத்தில் உள்ள பர்ஜாங் கிராமத்தில், ஜனவரி 4-ஆம் தேதி கிறிஸ்தவ பாதிரியார் பிபின் பிஹாரி நாயக்கை தாக்கி, அவர் வாயில் மாட்டுச் சாணத்தை திணித்து, ‘ஜெய் ஸ்ரீராம்’ என சொல்லச்சொல்லி வற்புறுத்தியுள்ளது பஜ்ரங் தள் அமைப்பு. அவரை வலுக்கட்டாயமாக திலகம் அணியச் செய்ததுடன், செருப்பு மாலையிட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். இந்துத்துவா கும்பலால் பாதிரியார் கொடூரமாக தாக்கப்பட்டு, பொதுவெளியில் பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு 15 நாட்களுக்கும் மேலாகிவிட்டது. ஆனால், இதுவரை அந்த வழக்கில் யாரும் கைது செய்யப்படவில்லை. பாரதிய ஜனதா கட்சி ஒடிசாவில் ஆட்சி அமைத்த நாள்முதல் இத்தகைய சம்பவங்கள் சர்வ சாதாரணமாகி வருகின்றன. கடந்த சில வாரங்களில் மட்டும் மாடுகளை ஏற்றிச் சென்றதற்காக ஒரு முஸ்லிம் நபர் பசு பாதுகாவலர்களால் அடித்துக் கொல்லப்பட்டார்.

மயூர்ஞ்ச் மாவட்டத்தில் மற்றொரு முஸ்லிம் இளைஞர் நிர்வாணப்படுத்தப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். மல்கங்கிரி மாவட்டம் கோட்டமத்தேரு கிராமத்தில் தேவாலயத்திலிருந்து திரும்பிய கிறிஸ்தவர்கள் தாக்கப்பட்டதில் எட்டு பேர் காயமடைந்தனர்.

இம்மாதத் தொடக்கத்தில் கன்னியாஸ்திரி ஒருவரை பஜ்ரங் தள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் ரயிலில் இருந்து வலுக்கட்டாயமாக கீழே இறக்கிவிட்டுள்ளனர். மதமாற்றப் புகாரில் அவரை 18 மணி நேரம் காவலில் வைத்த கொடுமையும் நடந்திருக்கிறது. கடந்த மாதம் கிறிஸ்துமஸ் பொருட்களை விற்றதற்கானக அப்பாவி கூலித் தொழிலாளர்களை இந்துத்துவா அமைப்பினர் மிரட்டி, கடைகளை அகற்றினர். கட்டாக்கில் துர்கா பூஜையின்போது முஸ்லிம்கள் வசிக்கும் பகுதி வழியாக சென்று, வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டனர். ஒடிசாவிற்கு வளர்ச்சியை தரப்போகிறோம் என்று நீட்டி முழங்கினார்கள் மோடியும் அமித் ஷாவும். ஆனால் வன்முறையும் மதவெறுப்பும்தான் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதைத்தான் அங்கிருந்து வரும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

## ஊழலால் ஊசலாடுகிறார் அதானி!

பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. அந்த அடையாளத்தை பா.ஜ.க.விடம் கொடுத்துவிட்டு, தலையாட்டி பொம்மை போல, பா.ஜ.க.வின் முடிவுகளுக்கு இணங்கி கட்டுப்பட்டு நிற்கிறது. கூட்டணியை அறிவிக்கும் துணிச்சல் கூட அ.தி.மு.க.வுக்கு இல்லாமல், அமித் ஷா சென்னை வந்து அறிவித்துவிட்டுப்போனார். அதன்தொடர்ச்சியாக இப்போது அ.தி.மு.க. தலைமையில் முதல் பிரச்சார கூட்டத்தை நடத்தாமல், பா.ஜ.க செங்கல்பட்டில் நடத்திய கூட்டத்தில் அ.தி.மு.க.வும் பத்தில் ஒன்றாக கலந்துகொள்ளும் பரிதாபத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது.

அக்கூட்டத்தில் பலரும் ஊழல்... ஊழல் என்று பேசியிருக்கிறார்கள். ஆனால் அதானியின் ஊழல்தான் இன்றைக்கு உலகம் முழுக்க பேசுபொருளாக மாறியிருக்கிறது. அதானி கிரீன் எனர்ஜி திட்டங்களுக்காக இந்திய அதிகாரிகளுக்கு ரூ.2,200 கோடி வரை லஞ்சம் கொடுத்ததாக அமெரிக்க வழக்கறிஞர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். ஆனால் இதை மறைத்து அமெரிக்க முதலீட்டாளர்களிடம் பல்லாயிரம் கோடி ரூபாய் முதலீடு பெறப்பட்டுள்ளதாகவும், இது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வெகுவாகப் பாதித்திருக்கிறது என்றும் குற்றம்சாட்டி, அமெரிக்க பங்குச் சந்தை கட்டுப்பாட்டு அமைப்பான பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம் (எஸ்.இ.சி.) அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது. இந்த வழக்கில் கௌதம் அதானி மற்றும் சாகர் அதானிக்கு முறைப்படி சம்மன் அனுப்பி விசாரிக்க, இந்தியத் தரப்பில் இருந்து போதிய ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்பதால் இருவருக்கும் மின்னஞ்சல் மூலம் சம்மன் அனுப்ப அனுமதி கோரியுள்ளது.

இந்த சட்ட நடவடிக்கைகள் காரணமாக, அதானி எண்டர்பிரைசஸ், அதானி கிரீன், மற்றும் அதானி போர்ட்ஸ் போன்ற பங்குகள் 10% வரை வீழ்ந்திருக்கின்றன. இதில் எல்.ஐ.சி.க்கும் ஒரே நாளில் 12,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் கௌதம் மீதான இந்த ஊழல் புகார் குறித்து பிரதமர் மோடியோ அல்லது பாரதிய ஜனதா கட்சியோ இதுவரை வாய் திறக்கவே இல்லை. எதிர்க்கட்சிகள் மீது மட்டும் ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்துகிற பா.ஜ.க.வின் வழக்கமான அரசியல் தமிழ்நாட்டில் இதற்குமுன்பும் எடுபட்டதில்லை, இனியும் எடுபடப்போவதும் இல்லை.

## மூடப்பட்ட தீண்டாமை தேநீர் கடை

ஸ்ரீபாலதண்டாயுதபாணி டீக்கடை தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனி டம்ளர்; தனி இடம் என்று ஜாதிய தீண்டாமையை கடைப்பிடித்து வந்தது, கோயம்புத்தூரில் உள்ள நாதேகவுண்டன் புதூர் என்ற ஊர். இதனை கோவை மாவட்டக் கழகம் ஏற்கனவே வைக்கம் போர் முடியவில்லை என்ற தலைப்பில் தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் ஊர்களில் களஆய்வு செய்து தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறையிடம் புகார் மனு கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. சமூக வலைதளங்களிலும் பதிவிட்டுள்ளது. தற்போது இதனை (The Hindu) பொதுவெளியில் செய்தியாக வெளியிட்டிருந்தது. ஆகவே அதன் எதிரொலியாக ஸ்ரீ பாலதண்டாயுதபாணி டீக்கடை மூடப்பட்டது.

ஏற்கனவே தீண்டாமையைக் கடைப்பிடித்து வந்த ஊர்களில் தற்போது ஒரு தனியார் செய்தி நிறுவனம் களஆய்வு செய்து வடிவேலம்பாளையம், மெட்டுவாவி பெரியகளந்தை ஊர்களிலும் அனைவருக்கும் சரிசமமாக ஒன் யூஸ் டம்ளரில் (காகிதக் குவளையில்) தான் தேநீர் தருகிறார்கள் என்ற செய்தியும் தற்போது வந்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர்-29, 2025 கோவையில் மாநிலம் தழுவிய ஜாதி தீண்டாமைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை கழகம் நடத்தியது குறிப்பிடத்தக்கது. அதன் எதிரொலியாக கோவையில் பல்வேறு இடங்களில் தற்போது நீண்டகால தீண்டாமை ஜாதிய பாகுபாடு முடிவுக்கு வந்துள்ளது.

**தலையங்கம்**

# டிரம்பின் திமிர்த்தனம் அடக்கப்பட வேண்டும்!

அமெரிக்க அதிபராக இரண்டாவது முறையாக டிரம்ப் பதவியேற்றதில் இருந்தே சர்வதேச அளவில் குழப்பங்கள், பொருளாதார நெருக்கடிகள், போர்ப்பதற்றங்களை உருவாக்கும் செயல்களைத் தொடர்ச்சியாக செய்து கொண்டிருக்கிறார். ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யக்கூடாது, குறிப்பாக அமெரிக்காவின் டாலரைத் தவிர்த்துவிட்டு ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்யவே கூடாது என மிரட்டல் விடுத்து, இந்திய பொருட்களுக்கு 50% வரி விதித்திருக்கிறார். ரஷ்யாவிடம் இருந்து சலுகை விலையில் அம்பானி நிறுவனம் கச்சா எண்ணெய் வாங்கினாலும், பெட்ரோல், டீசல் விலையை குறைக்காமல் அதன் பலன் இந்தியர்களுக்கு கிடைக்காமல் செய்துவிட்டது ஒன்றிய அரசு. பலனை அனுபவித்தது பெரும்பாலும் அம்பானிதான். ஆனால் இப்போது வரியேற்றத்தால் ஜவுளிகள், நகைகள், மீன்கள், தோல் பொருட்கள் ஏற்றுமதி துறையினரே மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டு, பல லட்சக்கணக்கானோர் வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. டிரம்பை எதிர்த்து கருத்துச்சொல்லவோ, வரிவிதிப்பை நீக்கவோ எந்த முயற்சியும் எடுக்காமல் கள்ள மவுனம் காக்கிறது மோடி அரசு.

அதேபோல உலக அளவில் 17% எண்ணெய் இருப்பைக் கொண்டுள்ள நாடு வெனிசுலா. முதலீடுகள் மற்றும் வர்த்தகத் தொடர்புகள் ரீதியாக சீனாவுடன் மிக நெருக்கமாக உள்ளது அந்நாடு. ஆனால் வெனிசுலாவின் எண்ணெய் வளங்களை கைப்பற்றும் நோக்கில், அந்நாட்டு அதிபர் நிகோலஸ் மதுரோவை கைது செய்திருக்கிறது அமெரிக்க ராணுவம். போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நடவடிக்கை என்ற பெயரில் இந்த அராஜக செயலில் ஈடுபட்டிருக்கிறது அமெரிக்கா. இன்னொரு நாட்டின் அதிபரை கைது செய்ய அமெரிக்காவுக்கு யார் அதிகாரத்தை தந்தது என்ற கேள்விகள் சர்வதேச அளவில் எழுந்துள்ளன. எனினும் இந்த கைது நடவடிக்கையால் வெனிசுலாவின் பொருளாதாரம் நிலைகுலைந்துள்ளது. வெனிசுலா உள்ளிட்ட லத்தீன் அமெரிக்க நாடுகளில் சீனாவின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவர டிரம்ப் தீவிரம் காட்டுவதுடன், சீனப் பொருட்களுக்கு 60% வரி விதிக்கப் போவதாகவும் மிரட்டி வருகிறார்.

இதுவரை அமெரிக்காவின் நட்பு சக்தியாக திகழ்ந்துவந்த ஐரோப்பிய ஒன்றியமும் டிரம்பின் கோமாளித்தனங்களுக்கு தப்பவில்லை. ஆர்க்டிக் பகுதியில் அமைந்துள்ள உலகின் மிகப்பெரிய தீவான கிரீன்லாந்தை விலைக்கு வாங்க விரும்புவதாக தடாலடியாக அறிவித்துள்ளார் டிரம்ப். இனுயிட் என்ற பழங்குடி மக்கள் சுமார் 56,000 பேர் கிரீன்லாந்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதை பொருட்படுத்தாமல் தனது ஏவுகணைகளை நிலைநிறுத்தவும், கப்பல்களை கண்காணிக்கவும், எதிரி நாட்டு ஏவுகணைகளைக் கண்காணிக்கவும் கிரீன்லாந்தை ஒரு தளமாக பயன்படுத்தலாம் என கணக்குப்போடுகிறார் டிரம்ப். இதற்கு ஐரோப்பிய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்ததால், டென்மார்க் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் பொருட்கள் மீது 10% வரி விதிக்கப்போவதாக டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார். டிரம்பின் இந்த மிரட்டலுக்குப் பதிலடியாக, ஐரோப்பிய நாடாளுமன்றம் அமெரிக்காவுடன் ஜூலை 2025-ல் செய்துகொண்ட வர்த்தக ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்துள்ளது. அதேபோல உக்ரைன் போருக்கான நிதியுதவியை அமெரிக்கா குறைத்து வருவதால், ஐரோப்பிய நாடுகள் தங்கள் சொந்த பாதுகாப்பிற்காக அதிக செலவு செய்ய வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளன.

அதேபோல, மெக்சிகோ மற்றும் கனடாவிலிருந்து வரும் அனைத்துப் பொருட்கள் மீதும் 25% வரி விதித்துள்ளார் டிரம்ப். மெக்சிகோ எல்லையில் போதைப் பொருள் மற்றும் அகதிகள் தடுப்பைத் தீவிரப்படுத்தாவிட்டால், வரியை மேலும் அதிகரிக்கப்போவதாக டிரம்ப் தொடர்ந்து மிரட்டி வருகிறார். இதற்குப் பதிலடியாக கனடாவும் மெக்சிகோவும் அமெரிக்கப் பொருட்கள் மீது வரிவிதிப்பை அமல்படுத்தியுள்ளது. இதனால் அமெரிக்கா, கனடா, மெக்சிகோ என 3 நாடுகளில் விலைவாசி கடுமையாக உயர்ந்து வருகிறது. இன்னொருபக்கம் ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியை பூஜ்ஜியமாக்க (Zero Exports) அமெரிக்கா கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. ஈரானுடன் வர்த்தகம் செய்யும் எந்தவொரு நாட்டின் மீதும் 25% வரி விதிக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த பொருளாதார நெருக்கடியால் ஈரானில் விலைவாசி கடுமையாக உயர்ந்து, அரசுக்கு எதிராக மிகப்பெரிய மக்கள் போராட்டங்கள் அங்கு வெடித்துள்ளன.

இஸ்ரேலின் அத்துமீறலால் நிலைகுலைந்துள்ள காசாவிற்கு ஐ.நா. உதவுவதைத் தடுக்கும் வகையில், ஐ.நா. சபையின் அகதிகள் அமைப்பிற்கு (UNRWA) அமெரிக்கா வழங்கி வந்த நிதியுதவியை டிரம்ப் நிரந்தரமாக நிறுத்திவிட்டார். ஜனவரி 2026-ல் தாவோஸில் நடைபெற்ற கூட்டத்தில், காசாவை நிர்வகிக்க "அமைதிக் குழு" ஒன்றை அமைப்பதாக டிரம்ப் தான்தோன்றித்தனமாக அறிவித்தார். ஒரு "தொழில்நுட்பக் குழுவால்" (Technocratic Committee) காசா நிர்வகிக்கப்படும் என்று கூறுவது, எதிர்காலத்தில் பாலஸ்தீன அரசிற்கான உத்திரவாதத்தை கேள்விக்குள்ளாக்குகிறது. காசாவை அமெரிக்கா அல்லது அதன் நட்பு நாடுகள் முழுமையாக கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டு, அதை ஒரு வர்த்தக மையமாக மாற்றும் அபாயகரமான யோசனையையும் டிரம்ப் முன்வைத்திருக்கிறார் என்பதையும் இதனோடு சேர்த்துப் பார்க்க வேண்டியுள்ளது.

தென்ஆப்பிரிக்காவில் வெள்ளையின விவசாயிகளுக்கு எதிராக இனப்படுகொலை நடப்பதாகக் குற்றம்சாட்டி, அந்நாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் சில பொருட்களுக்கும் 30% வரி விதித்துள்ளார் டிரம்ப். அந்நாட்டிற்கான அனைத்து நிதியுதவிகளும் நிறுத்தப்பட்டுள்ளன. இதற்குப் பதிலடியாக, தென் ஆப்பிரிக்கா ஜி20 அமைப்பிலிருந்து தற்காலிகமாக விலகுவதாக அறிவித்துள்ளது. பிரிக்ஸ் கூட்டணியில் உள்ள நாடுகள் மீது 10% கூடுதல் வரி விதித்துள்ளார் டிரம்ப். ஆப்பிரிக்காவில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த அமெரிக்கா வழங்கி வந்த PEPFAR நிதியை டிரம்ப் பெருமளவு குறைத்துவிட்டார். இதனால் கென்யா, ஐவரி கோஸ்ட் மற்றும் தென் ஆப்பிரிக்காவில் ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் வேலை இழந்துள்ளனர். ஐ.நா. அமைப்புகளுக்கான நிதியை நிறுத்தியதால், நைஜீரியா மற்றும் தெற்கு சூடானில் (South Sudan) நிவாரணப் பொருட்களைக் கொண்டு செல்லும் விமானச் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இப்படி உலகம் முழுவதும் அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா என அனைத்து கண்டங்களில் டிரம்பின் அடாவடியால் வீண் பதற்றமும், பொருளாதார நெருக்கடியும், வேலையிழப்பு அபாயங்களும் பெருகியுள்ளன. சர்வதேச அளவிலான ஒரு செயற்கையான வர்த்தகப் போருக்கு உலக நாடுகளை தள்ளிக்கொண்டிருக்கிறார் டிரம்ப். இந்தத் திமிர்த்தனத்தை உலக நாடுகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது நியாயமற்றது!

# ஊழல் வழக்குகளால் உருவான என்.டி.ஏ. கூட்டணி!

*‘பாரத் மாதா க்கி ஜே, வந்தே மாதரம்’ முழக்கங்களோடு தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரம் மதுராந்தகத்தில் துவங்கி இருக்கிறது. இதில் சுவையான பல காட்சிகள் அரங்கேறி இருக்கின்றன.*

*“நாங்கள் ஜெயலலிதாவின் பிள்ளைகள், அண்ணன் தம்பிகளான நாங்கள் எங்களுக்குள் அடித்துக் கொள்வோம், அதை எல்லாம் நம்பாதீர்கள். இப்போது எங்கள் குடும்பத் தலைவர் மோடி எங்களை சேர்த்து வைத்து விட்டார்” என்கிறார்கள் தினகரனும் எடப்பாடியும்.*

*தேர்தல் ஆணையத்திடம் தினகரன் இரட்டை இலை சின்னத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்று பிடிபட்ட வழக்கு நிலுவையில் இருப்பதற்கும் இதற்கும் எந்த தொடர்பும் சத்தியமாக இல்லை. திமுக ஆட்சியின் ஊழலை ஒழிக்க வேண்டும் என்ற ஒரே "இலட்சியத்திற்காக"வே இந்த திடீர் பாசம்!*

*‘ஊழல் ஆட்சி ஒழியும்’ என்று இடி முழக்கம் செய்திருக்கிறார் அன்புமணி. இவர் ஒன்றிய அமைச்சராக இருந்தபோது தனியார் மருத்துவக் கல்லூரி அனுமதிக்காக லஞ்சம் வாங்கிய வழக்கு நிலுவையில் இருக்கிறது என்பதை அவரது அன்புத் தந்தை மருத்துவர் ராமதாஸ் அவர்களே சுட்டிக்காட்டி, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அண்மையில் பாமக பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றி இருப்பதை இந்த ஊழல் ஒழிப்புடன் தொடர்புபடுத்த வேண்டாம்.*

*தமிழ்நாட்டில் நடந்த ஜெயலலிதா ஆட்சி தான் மிகச்சிறந்த ஆட்சி என்று சான்றிதழ் வழங்கியிருக்கிறார் மோடி. ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டு சிறை சென்ற இந்தியாவின் ஒரே முதலமைச்சர் ஜெயலலிதா தான் என்பதை இந்த ஊழல் ஒழிப்போடு இணைத்துப் பார்க்க வேண்டாம்.*

*எடப்பாடிக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் வந்த ஊழல் வழக்கிற்கு அடிப்படை ஆதாரங்கள் இருக்கிறது என்றும் இதை சி.பி.அய்-விசாரிக்க வேண்டும் என்றும் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டவுடன் ஓடோடி உச்சநீதிமன்றம் சென்று தடை வாங்கி தன்னை காப்பாற்றிக் கொண்டிருக்கும் எடப்பாடியும் ஊழலுக்கு எதிராக கர்ஜனை செய்திருக்கிறார்.*

*இந்த ஊழல் வழக்குகள் தான் இந்த ஊழல் ஒழிப்பு கூட்டணியையே இணைத்து ஊழல் ஒழிப்புக்காக களமிறக்கி இருக்கிறது.*

*தேர்தல் பத்திர ஊழல் புகழ் மோடி ஆட்சி இவர்களோடு இணைந்து ஊழல் ஒழிப்புக்கு இரட்டை எஞ்சின் ஓட்ட வந்திருக்கிறது.*

*‘பாரத் மாதாக் கீ ஜே!’*
*‘ வந்து ...ஏமாத்ரம்!’*

*– விடுதலை இராசேந்திரன்*
*முகநூல் பதிவு*
*24.01.2026*

# ஊடகவியலாளர் மகிழ்நன் தாயார் மறைவு!

*அரண்செய் ஊடகவியலார் தோழர் மகிழ்நன் அவர்களின் தாய் உடல்நல குறைபாடு காரணமாக சனவரி 22 அன்று மறைவுற்றார்.*



*அவரது தாயின் உடலுக்கு சென்னை மாவட்டக் கழகம் சார்பில் அவரது இல்லத்தில் உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்), அருண் (இளைஞரணி அமைப்பாளர்), த.நா சூர்யா (திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர்) ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.*

# பெரியார் முழக்கம் சந்தா குவிகிறது!

*தமிழ்நாடு மாணவர் கழக சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு 25 பெரியார் முழக்கத்துகான சந்தா தொகை ரூ.7,500 கழகத் தலைவரிடம் வழங்கினார்.*

*தோழர் முருகேசன் மதுரை மாவட்டக் கழகம் சார்பாக 29 பெரியார் முழக்க சந்தா மற்றும் ரூ.8,700 தொகையை பெரியார் முழக்க வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார்.*

*தோழர் துரை. தாமோதரன் பெரம்பலூர் மாவட்டக் கழகம் சார்பாக ரூ.10,000 பெரியார் முழக்க வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார்.*

*தோழர் வேணுகோபால் (தர்மபுரி மாவட்டத் தலைவர்) தர்மபுரி மாவட்டக் கழகம் சார்பாக ரூ.12,900 தொகையை பெரியார் முழக்க வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார்.*

*தோழர் திருப்பூர் முத்து 20 பெரியார் முழக்கச் சந்தாவுகான ரூ.6000 தொகையை பெரியார் முழக்க வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார்.*

**நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆசிரியர்)**

# ஈழத்து அடிகளும், மறைமலை அடிகளாரும் பெரியாரை விமர்சித்தார்களா?

## பெரியார் பித்தலாட்டமா? - பெருமாள் முருகன்

சென்னையில் நடைபெற்று முடிந்த 49-ஆவது புத்தகக் காட்சியில் வெளியான சில நூல்கள் அரசியல் ரீதியாகக் கவனத்தை ஈர்த்ததோடு பெரும் விவாதத்தையும் ஏற்படுத்தின. அவற்றில் இரண்டு நூல்கள் மொழிப்போர் பற்றியவை. இரண்டையும் வெளியிட்டது 'நாம் தமிழர்' கட்சி சார்புடைய 'தமிழம் பதிப்பகம்.' திராவிட இயக்க அரசியலுக்கும் தமிழ்த் தேசியம், இந்திய தேசியம் ஆகிய அரசியல் சக்திகளுக்கும் இடையே நடைபெற்று வரும் போராட்டத்தில் இந்நூல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

### தலைப்பில் இருந்து தகிடுதத்தம்

ஈழத்துச் சிவானந்த அடிகள் எழுதிய 'இந்தி எதிர்ப்புப் போரில் ஈவெரா பித்தலாட்டம்' என்பது ஒருநூல். ஈழத்தடிகள், ஈழத்து அடிகள், கருவூர் ஈழத்து அடிகள், ஈழத்துச் சிவானந்த அடிகள் என்றெல்லாம் பெயர் காணப்படும் ஈழத்து அடிகள் 1965-இல் எழுதிய 'இந்தி எதிர்ப்பு அன்றும் - இன்றும்' என்னும் நூலே இதன் மூலம் ஆகும். தமிழம் பதிப்பகம் வெளியிட்டுள்ள இன்னொரு நூல் மறைமலையடிகள் எழுதிய 'முதலாம் இந்தி எதிர்ப்புப் போர்: தொடங்கியது யார்?' என்னும் தலைப்புடையது. இதன் மூலம் மறைமலை அடிகள் 1937-இல் எழுதிய 'இந்தி பொதுமொழியா?' என்னும் நூல்.

இரண்டு நூல்களின் தலைப்பையும் மாற்றி வெளியிட்டிருக்கிறார்கள் என்று மிக நாகரிகமாகச் சொல்லலாம். உண்மையில் தலைப்புகளைத் திரித்து வெளியிட்டிருக்கிறார்கள். ஈழத்து அடிகளின் நூல் கிரௌன் அளவில் 45 பக்கங்கள் கொண்டது. அதில் கிட்டத்தட்ட இருபது முறையேனும் பெரியார் பெயரைக் குறிப்பிட்டிருப்பார். எல்லா இடத்திலும் 'பெரியார் இராமசாமி அவர்கள்' என்றே எழுதுகிறார். ஓரிரு இடத்தில் 'பெரியார் ஈ.வே.இராமசாமி' என்கிறார். தனித்தமிழ் ஈடுபாடு கொண்டவர் ஈழத்து அடிகள் என்பதால் 'ராமசாமி' என்று எழுதாமல் 'இராமசாமி' என்றே எழுதுகிறார். பெரியார் என்பதையும் தவிர்க்கவில்லை. 'அவர்கள்' என்னும் அடைமொழியையும் தவிர்க்கவில்லை.

ஆனால் 'தமிழம்' வெளியிட்டுள்ள நூலின் தலைப்பிலேயே 'ஈவெரா' என்றிருக்கிறது. பெரியாரின் தந்தை பெயர் 'வெங்கட்ட நாயக்கர்' எனினும் 'வேங்கடம்' என்பதே சரி என்பதால் ஈ.வே.இராசாமி என்றுதான் முன்னெழுத்தைப் போடுகிறார் ஈழத்து அடிகள். பெரியார் கொள்கைகளையும் அவர் பெயரையும் அழித்தொழிக்காமல் தம் அரசியலை நிலைநிறுத்திக் கொள்ள முடியாது என்பதால் தமிழ்தேசியம், இந்திய தேசியம் ஆகிய அரசியலைத் தம் வழிமுறையாகக் கொண்டிருக்கும் கட்சிகள் அனைத்தும் பெரியாருக்கு எதிராக அணிவகுத்து நிற்கின்றன. அதற்கு எத்தகைய இழிவான வழிமுறைகளைக் கையாளவும் தயங்குவதில்லை. நூல்களைத் திரித்து வெளியிடுவது அவற்றில் ஒன்று. மூல நூலில் ஆசிரியர் பெயர் 'ஈழத்து அடிகள்' என்றுள்ளது. அதை 'ஈழத்துச் சிவானந்த அடிகள்' என்று மாற்றியுள்ளனர்.

### உட்தலைப்புகளில் பித்தலாட்டம்

தலைப்பு, பெயர் மட்டுமல்ல, ஈழத்து அடிகள் கொடுத்திருந்த உட்தலைப்புகள் சிலவற்றையும் மாற்றியுள்ளனர். குறிப்பாகப் பெரியார் பற்றிய பகுதிகளின் தலைப்புகள். உள்தலைப்பே இல்லாத ஓரிடத்தில் 'பெரியார் இராமசாமியின் எதிர்நிலை' என்று இவர்களாகவே தலைப்புக் கொடுத்துள்ளனர். 'மறியல் துவங்கியது' என்பது ஈழத்து அடிகள் கொடுத்த தலைப்பு. அதில் 'மறியல் துவங்கியது பெரியாரின் சண்டித்தனம்' எனப் பெரியாரைச் சேர்த்துள்ளனர். மூலத்தில் 'செயல் இங்கே புகழ் அங்கே' என்றிருக்கும் உட்தலைப்பு 'பெரியாரின் பித்தலாட்டம்' என்றாகியுள்ளது. 'பெரியாரின் இந்தி எதிர்ப்பு' என்னும் தலைப்பு 'பெரியாரின் இந்தி எதிர்ப்பு வேடம்' எனச் சேர்க்கை பெற்றிருக்கிறது.

**தலைப்பு, பெயர் மட்டுமல்ல, ஈழத்து அடிகள் கொடுத்திருந்த உட்தலைப்புகள் சிலவற்றையும் மாற்றியுள்ளனர். உள்தலைப்பே இல்லாத ஓரிடத்தில் 'பெரியார் இராமசாமியின் எதிர்நிலை' என்று இவர்களாகவே தலைப்புக் கொடுத்துள்ளனர். 'மறியல் துவங்கியது' என்பது ஈழத்து அடிகள் கொடுத்த தலைப்பு. அதில் 'மறியல் துவங்கியது பெரியாரின் சண்டித்தனம்' எனப் பெரியாரைச் சேர்த்துள்ளனர். மூலத்தில் 'செயல் இங்கே புகழ் அங்கே' என்றிருக்கும் உட்தலைப்பு 'பெரியாரின் பித்தலாட்டம்' என்றாகியுள்ளது.**

முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பின் திராவிட இயக்க அரசியலில் ஈடுபட்ட ஈழத்து அடிகள் 'இந்து மதம் தமிழர் மதமா?', 'பெரியபுராண ஆராய்ச்சி' ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். அறிஞர் அண்ணாவுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். அண்ணா நடத்திய 'திராவிட நாடு' இதழ் அலுவலகப் பொறுப்பை ஏற்றுப் பல்லாண்டுகள் செயல்பட்டிருக்கிறார். அப்படிப்பட்டவர் 'இந்தி எதிர்ப்பு அன்றும் இன்றும்' என்னும் நூலை எழுத என்ன காரணம்? அண்ணாவுடன் மனக்கசப்பு ஏற்பட்டு 1964 வாக்கில் பிரிந்திருக்கிறார். 1965ஆம் ஆண்டு இரண்டாம் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றுள்ளது. முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கியவர் அல்லது முக்கியப் பங்களித்த அவருக்கு இரண்டாம் எதிர்ப்புப் போராட்டத்தில் எந்தப் பங்கும் இல்லாத நிலை. எனவே தம் பங்களிப்பை விளக்கி எழுத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இரண்டாம் போராட்டத்தில் அண்ணா முன்னிலை பெற்றதை அவரால் ஏற்றுக்கொள்ளவும் இயலவில்லை. இவ்விரண்டின் வெளிப்பாடுதான் இந்நூல்.

இரண்டு போராட்டங்களுக்கும் கிட்டத்தட்ட முப்பதாண்டு இடைவெளி அதற்குள் நடைபெற்ற அரசியல் மாற்றங்கள் பல. திராவிட முன்னேற்றக் கழகத்தை அண்ணா தொடங்கி அது எதிர்க்கட்சியாக வளர்ந்திருந்தது. 'திராவிட நாடு' இதழ்ப் பணியில் இருந்த ஈழத்து அடிகள் இந்த அரசியல் வளர்ச்சியை ஆரோக்கியமானதாகப் பார்க்கவில்லை. அரசியல் தலைவராக அவர் உருவாகவும் இல்லை. ஆகவே 1938இல் தாம் தொடங்கிய போராட்டம் தன்னலமற்றது எனவும் அதைப் பெரியாரும் அண்ணா உள்ளிட்ட திராவிட இயக்கத்தவரும் பயன்படுத்திக் கொண்டனர் எனவும் 1965இல் நடைபெறும் போராட்டம் முழுக்க முழுக்க அரசியல் சார்பானது எனவும் மதிப்பிட்டார். முதல் போராட்டத்தில் தம் பங்கு மறைக்கப்படுகிறது என்று உணர்ந்தார். அதை நிலைநிறுத்தும் வகையில் இந்நூலை உருவாக்கினார். தம் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் சிறுமுன்னுரை, ஈழத்து அடிகளின் பங்கு பணியை விதந்தோதும் 'அணிந்துரைகள்' (இது தமிழம் வெளியீட்டில் 'சான்றோர் உரைகள்' என்றுள்ளது), நூலை வெளியிட்ட 'தென்றல் திரை' இதழ் ஆசிரியரின் 'அறிமுகம்' ஆகியவை நூலின் முன்பகுதியில் உள்ளன.

பின்னர் ஈழத்து அடிகள் எழுதிய நூல் பகுதி உள்ளது. அணிந்துரைகளில் மறைமலையடிகள், சோமசுந்தர பாரதி, சி.டி.நாயகம், சோ.சிவஞான தேசிகர், உமாமகேசுவரன், வெங்கடசாமி (நாட்டார்), நாரணதுரைக்கண்ணன், அருணகிரி அடிகள், சண்முகானந்த அடிகள் ஆகியோர் அவ்வப்போது எழுதியவை கொடுக்கப்பட்டுள்ளன. இராஜாஜியின் கூற்று ஒன்றும் இடம்பெறுகிறது. நாவலர் இரா.நெடுஞ்செழியன் 'மன்றம்' இதழில் எழுதிய பகுதி ஒருபக்கம் முழுவதும் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்தும் ஈழத்து அடிகளின் பங்களிப்பை ஏதோ ஒருவிதத்தில் எடுத்துச் சொல்பவை. தலைப்பை மாற்றித் தமிழம் பதிப்பகம் வெளியிட்ட இந்நூலைப் புத்தகக் கண்காட்சியில் விற்கக் கூடாது என்று காவல்துறை மிரட்டியதாகவும் படிகளைப் பறிமுதல் செய்ததாகவும் சமூக ஊடகப் பதிவுகள் சிலவற்றைக் கண்டேன். அது எந்தளவு உண்மை என்று தெரியவில்லை. அத்தகைய காணொலிப் பதிவு எதுவும் என் பார்வைக்குக் கிடைக்கவில்லை. நண்பர் ஒருவர் மூலமாகத் தமிழம் பதிப்பகக் கடையில் நூல் படியை வாங்கினேன். காட்சிக்கு வைத்திருக்கவில்லை எனவும் நூற்பெயர் சொல்லிக் கேட்போருக்கு மட்டும் மறைவிலிருந்து எடுத்துத் தருகிறார்கள் என்றும் நண்பர் சொன்னார். இந்நூல் வெளியீட்டுக்குப் பெரியார் ஆதாரவாளர்களின் எதிர்ப்பு அத்தனை வலுவாக இருந்ததா என்பது தெரியவில்லை. அப்படி எதிர்க்க வேண்டிய அவசியம் சிறிதும் இல்லை.

### இணையத்தில் கிடைக்கிறது!

ஈழத்து அடிகளின் மூல நூலை இணையத்தில் எளிதாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். அத்தகவலைப் பெரியாரியர்கள் பரப்பியிருக்க வேண்டும். அல்லது மூலநூலை பொருத்தமான முன்னுரையோடு அச்சிட்டு விநியோகித்திருக்கலாம். இலவசமாகக் கூட வழங்கியிருக்கலாம். தமிழம் வெளியீட்டில் நேர்ந்திருக்கும் திரிபுகளை எடுத்துக் காட்டியும் முதல் இந்தி எதிர்ப்புப் போரில் பெரியார் பங்களிப்பின் இடம் எத்தகையது என்பதை விளக்கியும் ஈழத்து அடிகளின் நூல் எழுந்த பின்னணி பற்றிக் கூறியும் ஒருமுன்னுரை மட்டும் எழுதிச் சேர்த்திருந்தால் போதுமானது. இப்போதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. சிலவற்றைச் செய்யலாம்.

அரசியல் இயக்கங்கள் தம் அன்றாடத்தில் கவனம் செலுத்தும் அளவு வரலாற்றுப் பதிவில் கவனம் கொள்வதில்லை. வரலாற்றைப் பேசினாலும் தம் தேவைக்கு ஏற்பவும் தம் அரசியல் நலனுக்கு உகந்த வகையிலும் மட்டும் எடுத்துப் பேசுகின்றன. சிலசமயம் அவை மிகைப்படுத்தலாகவும் இருக்கும். வரலாற்று அறிஞர்கள், ஆய்வாளர்கள்தான் நிதானமான வகையிலும் (சார்புகள் இருப்பினும்) ஆதாரப்பூர்வமாகவும் வரலாற்றை எழுத முடியும். வைக்கம் போராட்டத்தில் பெரியார் பங்கு பற்றிப் பலவிதமான கருத்துக்கள் நிலவி வந்த சூழலில் அதை ஆராய்ந்து பழ.அதியமான் எழுதிய 'வைக்கம் போராட்டம்' தெளிவைத் தருவதாக அமைந்தது. அதில் பங்கேற்ற தலைவர்கள் தொடங்கித் தொண்டர்கள் வரைக்கும் பலரது பங்களிப்புக்கும் உரிய இடமளித்துப் பெரியாரின் இடம் எத்தகையது என்பதை ஆதாரத்தோடு காட்டிய நூல் அது. அது போல முதல் மொழிப்போருக்கு ஓர் ஆய்வு நூல் அவசியம். அப்படி ஒருநூலை ஒருவர் எழுதினால் ஈழத்தடிகளின் இந்நூல் தகவல்களும் பெரிதும் பயன்படும். அதாவது இது சான்றாதார நூல்களில் ஒன்றாக விளங்கும். முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கியது தாம்தான் என்று நிலைநாட்ட விரும்பும் ஈழத்து அடிகள் 1937இல் மறைமலை அடிகள் எழுதிய 'இந்தி பொதுமொழியா?' என்னும் நூலைப் பதினையாயிரம் படிகள் அச்சிட்டு இலவசமாக வழங்கியுள்ளார். அதைத் தான் தமிழம் பதிப்பகம் 'முதலாம் இந்தி எதிர்ப்புப் போர்: தொடங்கியது யார்?' எனத் தலைப்பை மாற்றி இப்போது பதிப்பித்துள்ளது. ஈழத்தடிகளின் நூலிலாவது 'இதன் விளைவு பிறகு இந்தி எதிர்ப்புக்குப் பெரியார் இராமசாமி அவர்கள்தான் முதல்வர் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இது ஒரு பெரிய பித்தலாட்டமும் கொடுமையுமாகும்' என்று எழுதியுள்ளார். ஆகவே 'பித்தலாட்டம்' என்று தலைப்பிட்டிருக்கிறார்கள் எனச் சமாதானமாவது சொல்லலாம். மறைமலை அடிகள் நூலுக்கு ஒரு விழுக்காடும் பொருந்தாத தலைப்பைக் கொடுத்திருக்கிறார்கள்.

### பெரியாரால் வெடித்த போராட்டம்!

மறைமலை அடிகள் எழுதியதைப் போலவே சோமசுந்தர பாரதியார் 'இந்தி கட்டாயப் பாடமா?' என்னும் தலைப்பில் சிறுநூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அதைத் தமிழில் மொழிபெயர்த்துப் பதினையாயிரம் படிகள் அச்சிட்டு இலவசமாக விநியோகித்தவரும் ஈழத்து அடிகள்தான். மறைமலை அடிகள், சோமசுந்தர பாரதியார் ஆகியோர் பங்களிப்பும் இந்தி எதிர்ப்பில் இருந்துள்ளது என்பது உறுதி. அறிவாளர்களான இவர்கள் தொடங்கிய இந்தி எதிர்ப்பு பெரியாரின் தலையீட்டால் வெகுஜனப் போராட்டமாக மாறியிருக்கிறது. அதை ஈழத்து அடிகளே இவ்வாறு குறிப்பிடுகிறார்: '... இந்தி எதிர்ப்பைத் தோற்றுவித்த நானும் மற்ற இரு துறவிகளான அருணகிரி அடிகளும் சண்முகானந்த அடிகளும் சிறை சென்றுவிடவே படிப்படியாக இந்தி எதிர்ப்புப் போரைப் பெரியார் இராமசாமி அவர்களே ஏற்று நடத்தும் நிலை உருவாகியது. எல்லாம் அவருடைய விருப்பப்படி நடைபெற்று வந்தது.'

போராட்டத்தில் பெண்கள் பலர் சிறை சென்றனர். அதைப் பற்றி நிவேதிதா லூயிஸ் 'முதல் இந்தி எதிர்ப்புப் போரில் பெண்கள்' என நூல் ஒன்றை எழுதியுள்ளார். போராட்டத்தில் பங்கேற்ற பெரும்பாலான பெண்கள் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். 105 பெண்கள் கைதானதாக ஈழத்து அடிகள் தகவல் தருகிறார். மொத்தமாக 1,247 பேர் சிறை சென்றதாகவும் அவரே கூறுகிறார். பெரியாரின் தலையீட்டால்தான் பெரும்போராட்டமாக மாறியிருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆகவே இப்போராட்டம் பற்றி இன்னும் விரிவான ஆய்வுகள் அவசியம்.

இதுவரைக்கும் வந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றிய பதிவுகளில் மறைமலை அடிகள், ஈழத்து அடிகள், சோமசுந்தர பாரதியார் ஆகியோர் பெயர்கள் குறிப்பிடப்பட்டே வருகின்றன. யாரும் மறைத்ததாகத் தெரியவில்லை. அண்ணாவிடம் இருந்து விலகும் வரையில் ஈழத்து அடிகளுக்கும் தம் பெயர் மறைக்கப்பட்டதாகத் தோன்றியிருக்க வாய்ப்பில்லை. முதல் இந்தி எதிர்ப்புப் போர் முடிவடைந்த ஓரிரு ஆண்டுக்குள்ளாக 1941இல் அவர் எழுதிய 'பெரியபுராண ஆராய்ச்சி' நூலின் முன்னுரையில் பெரியாரைப் பற்றி இப்படி எழுதுகிறார்: 'தமிழ்நாடு தனியாகப் பிரிக்கப்பட வேண்டுமென்ற கிளர்ச்சியைத் துவக்கி, அதன் பொருட்டு ஓயாது உழைத்து வரும் தமிழ் மக்களின் தன்மதிப்பியக்கத் தலைவரும் திராவிட மக்கள் அனைவருடையவும் அரசியல் தலைவராயும் இருந்து வருபவரான தோழர் ஈ.வெ.இராமசாமிப் பெரியார் அவர்கள்...' (ப.x).

1941-இல் பெரியார் மீது இத்தகைய மதிப்பீடு கொண்டிருந்த ஈழத்து அடிகள் 1965-இல் மாறியதற்கு அப்போதைய அவரது நிலைதான் காரணம். 'இந்தி எதிர்ப்பு அன்றும் இன்றும்' நூலை அவர் எழுதிய பிறகு 1973இல் 'பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்' மூலமாக 'பெரியபுராண ஆராய்ச்சி' நூல் மறுபதிப்பாக வெளிவந்துள்ளது. அதன் அட்டையிலும் தலைப்புப் பக்கத்திலும் 'இது கருவூர் அறிவுதயக் கழகத் தலைவரும் 'இந்து மதமும் தமிழரும்' நூலின் ஆசிரியரும் முன்னாள் - இந்தி எதிர்ப்புத் தனி ஆணையாளரும் (சர்வாதிகாரியும்) தமிழ்த் தொண்டருமான கருவூர் ஈழத்து அடிகளால் இயற்றப்பட்டது' என விளக்கமாக அவர் பெயர் இடம்பெற்றுள்ளது. பெரியார் இறப்புக்கு முன் வெளியான நூல் இது. அப்போது பெரியார் பற்றிய ஈழத்து அடிகளின் கருத்து மாறிவிட்டது. முதல் இந்தி எதிர்ப்புப் போரில் ஈழத்து அடிகளின் பங்களிப்பைப் பெரியார் அங்கீகரித்திருந்தார் என்பதற்கும் இதுவே சான்று. 'இந்தி எதிர்ப்பு அன்றும் இன்றும்' நூலின் இறுதிப் பக்கத்தில் முதல் இந்தி எதிர்ப்புப் போர் வரலாற்றைப் 'புனிதப் போர்' என்னும் தலைப்பில் தாம் எழுதியிருப்பதாகவும் அச்சில் 300 பக்கம் வரும் எனவும் அதற்கு அன்பளிப்பு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கும் செய்தி ஒன்று காணப்படுகிறது. அவர் எழுதிய நூல் வெளியானதாகத் தெரியவில்லை. அவர் எண்ணத்தை நிறைவேற்றும் வகையிலேனும் அப்படி ஒருநூல் வெளிவர வேண்டும். வந்தால் ஈழத்து அடிகளின் நூல் பின்னணியும் பெரியார் பித்தலாட்டம் செய்தாரா இல்லையா என்பதும் ஆதாரத்தோடு வரலாறாகும்.

**பெரியார் மீதான ஜீவாவின் விமர்சனங்களுக்கான கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் பதிலடி அடுத்த இதழில் வெளிவரும்.**

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# தமிழர் திருநாள் கொண்டாட்டங்கள்

சென்னையில் கழகத்தினர் தொடர்ச்சியாக பல ஆண்டுகளாக தமிழர் திருநாள் பொங்கல் விழாவை தோழமை இயக்கத்தினர் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து கொண்டாடி வருகின்றனர். பொங்கல் விழாவை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் நடன நிகழச்சிகள் என கோலகல கொண்ட்டாட்டத்துடன் கொண்டாடி வருகின்றனர். அதன் செய்தி தொகுப்புகள்:







சென்னை திருவல்லிக்-கேணியில் மறைந்த கழகத் தோழர். பத்ரி நாரயணனின் முன்னெடுப்பில் பொதுமக்கள் அரசியல் கட்சியினர் என அனைவரும் இணைந்து தமிழர் திருநாள் பொங்கல் விழா கடந்த 26-ஆண்டுகளாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த விழாவை திருவல்லிக்கேணி பகுதி பொதுமக்கள் இளைஞர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் என அனைவரும் இணைந்து, கோலாகல கொண்டாட்டத்துடன் சனவரி 13 மாலை 5 மணி அளவில் வி.எம். தெரு பெரியார் படிப்பகம் அருகில் நடைபெற்றது.

தோழர் கார்மேகம் கலைக்குழுவினரின் பறை இசை ஆட்டம், ஒயிலாட்டம் மயிலாட்டம், கிராமிய பாடல்கள், பொக்களிக்கால் ஆட்டம், நெருப்பு நடனம் என பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் மக்களை வெகுவாக ஈர்த்தது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி , தி. தமிழ் (திரைப்பட பட இயக்குநர், நடிகர்), முனைவர் மைம் கோபி (திரைப்பட இயக்குநர், ஜி மைம் ஸ்டுடியோ நிறுவனர்), திருமதி ஆர். சாஷா( திருநங்கை சமூக ஆர்வலர், அரசியல் செயற்பாட்டாளர்-திமுக), தமிழ்ச்செல்வன் (சேலம் ஆர்.ஆர் பிரியாணி உரிமையாளர்) மற்றும் ஆர்.என் துரை (திமுக மாவட்ட துணைச் செயலாளர்) ஆகியோர் பரிசளித்து வாழ்த்துரை வழங்கினர்.

சிறுவர்களுக்குக்கான மற்றும் பெண்களுக்கான விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தோழர்கள் அன்பு தனசேகர் (கழகத் தலைமைக் குழு உறுப்பினர்), கமலா செழியன் (திமுக மாமன்ற உறுப்பினர்), கீர்த்தனா, எம்.எஸ் கேட்டரிங் உரிமையாளர் விஜய், பவர் பாண்டி சிலம்பம் மாஸ்டர், வெங்கடேசன் (விசிக மாவட்டச் செயலாளர்) ஆகியோர் பரிசளித்து வாழ்த்தினார்கள்.

**விளையாட்டுப் போட்டிகள்:** திருவல்லிக்கேணியில் 26-ஆம் ஆண்டு பொங்கல் விழாவை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் ஜனவரி- 4 அன்று காலை 10-மணிக்கு பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து நிகழ்வை துவக்கி வைக்க வருகை தந்த தோழர்கள் நிவேதா ஜெசிகா (தேசிய மோட்டார் சைக்கிள் சாம்பியன்) மற்றும் கீர்த்தனா (கேரம் உலக சாம்பியன்) இருவரும் பறை இசை முழங்க ஊர்வலமாக விளையாட்டு போட்டிகள் நடைபெறும் இடமான சைவ முத்தையா 5வது தெருவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

நிவேதா ஜெசிகா (தேசிய மோட்டார்_சைக்கிள்_பந்தய_சாம்பியன்) ஓட்டப் பந்தய போட்டியை தொடங்கி வைத்து உரையாற்றினார்."நான் இந்த துறையில் சாதிப்பதற்கு உந்து சக்தி பெரியார்தான். மோட்டார் சைக்கிள் துறை ஆண்களுக்கானதாக இருந்தது, இன்றைக்கு பெண்கள் உள்ளே வந்திருக்கிறார்கள். திராவிட மாடல் அரசு விளையாட்டு துறைக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. தமிழ்நாடு அரசு அனைத்து விதமான விளையாட்டுகளுக்கும் மாவட்டந்தோறும் முதலமைச்சர் கோப்பை பந்தயம் நடத்தி வருகிறது. விளையாட்டு துறையில் பல்வேறு மாற்றங்கள் மற்றும் உலக அளவில் தமிழ்நாடு விளையாட்டு துறை கவனம் பெற்று வருகிறது. எனவே இளைஞர்கள் ஏதாவது ஒரு விளையாட்டில் ஆர்வமுடன் பங்குபெறுங்கள் அது உங்களுக்கு உடலுக்கும் மனதுக்கும் மிகவும் நல்லது. எங்களைப்போல் ஏராளமான பெண்கள் இன்னும் இந்த துறையில் சாதிக்க முன்வாருங்கள்" என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

கீர்த்தனா (7வது_உலக_கோப்பையில்_மூன்று_பிரிவில்_தங்கம் வென்ற உலக சாதனையாளர்) கேரம் போட்டியை தொடங்கி வைத்து உரையாற்றினார். "நான் இந்த அளவுக்கு உலக அளவில் வெல்வதற்கு முக்கிய காரணம் என்னுடைய பயிற்சியாளர்தான். நான் வறுமையின் பிடியில் மீள முடியாமல் இருந்த நிலையில் எனக்கு பெரு உதவியாக என்னுடைய குடும்பமும், பயிற்சியாளரும் உறுதுணையாக இருந்ததால்தான் உலக சாம்பியன் பட்டம் சாத்தியப்பட்டது. தமிழ்நாடு அரசு எனக்கு 1 கோடி ரூபாய் தற்போது தந்துள்ளது. மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். வடசென்னை என்றாலே சிலரது தவறான கண்ணோட்டத்தை நான் சிறிதளவு மாற்ற முயற்சித்து இருக்கிறேன். ஆகவே இளைஞர்கள் ஏதாவது ஒரு விளையாட்டு துறையில் பங்கெடுத்து, பயிற்சியாளர்கள் சொல்படி கடுமையாக உழைத்தால் அனைவரும் நாளை உலக சாம்பியன்தான்" என்று தனது உரையில் குறிப்பிட்டார். திமுக மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.என். துரை பேசுகையில், கழகத்தின் இந்த செயல்பாடுகளை பாராட்டி நான் எப்போதும் உறுதுணையாக இருப்பேன் என்று கூறினார்.

உமாபதி (மாவட்டச் செயலாளர்) பேசும்போது, "இந்த பொங்கல் விழாவை மறைந்த பத்ரி நாராயணன் முன்னெடுத்தார் பிறகு இந்த பகுதி மக்களும் இயக்கமும் சேர்ந்து 26-வது ஆண்டாக தொடர்ந்து நடத்தி வருகிறோம். இந்த ஆண்டு ஒரு நெகிழ்வான நிகழ்வு காரணம் பெரியாரின் பெண்ணுரிமை உணர்வோடு தங்கைகள் இந்த நிகழ்வுக்கு வந்ததுதான். பெரியார் பெண்களை ஆண்களுக்கு சமமாக எல்லா துறையிலும் சாதிக்க வேண்டும் என்றார். அந்த வகையில் தோழர் நிவேதிதாவும் கீர்த்தனாவும் சாதித்து இருக்கிறார்கள் அவர்களை சிறப்பிக்கும் வாய்ப்பு எங்களுக்கு கிடைத்துள்ளது" என்று கூறினார்.

நிவேதிதா அவர்களுக்கு ஆர்.என்.துரை (திமுக மாவட்ட துணைச் செயலாளர்) கழக வெளியீடுகளை வழங்கினார். கீர்த்தனா அவர்களுக்கு தபசி குமரன் கழக வெளியீடுகளை வழங்கினார். கார்மேகம் குழுவினருக்கு முகில் ராசு (திருப்பூர் மாவட்ட தலைவர் திவிக) கழக வெளியீடுகளை வழங்கினார். சதுரங்க போட்டியை வீராங்கனை கீர்த்தனாவின் பயிற்சியாளர் நந்தா தொடங்கி வைத்தார். சுமார் 10-மேற்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டன. பெண்களுக்கான பானை உடைத்தல், கரும்பு உடைத்தல், இசை நாற்காலி போன்ற போட்டிகள் நடைபெற்றது. இதில் 200-க்கும் மேற்பட்டோர் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

இளையோருக்கான கபடி மற்றும் கைப்பந்து போட்டிகள் கில் ஆதர்ஷ் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இதில் ஆண்கள் பெண்கள் என 50-க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்றனர். சுமார் 500-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் விளையாட்டு போட்டியை கண்டுகளித்தனர். போட்டிகளை திருவல்லிக்கேணி கழகத் தோழர்கள் மற்றும் பகுதி இளைஞர்கள் இணைந்து நடத்தியது குறிப்பிடத்தக்கது. கழகத் தோழர் இரண்யா சிறார்களுக்கான போட்டிகள் மற்றும் பெண்களுக்கான போட்டிகளை ஒருங்கிணைத்தார்.

திருவல்லிக்கேணி பகுதி இளைஞர்கள் ரஞ்சித், பாலா, மணி, அருண், உள்ளிட்ட பலரும் கழகத்தினர் திருவல்லிக்கேணி பகுதி பொறுப்பாளர்கள் கோபிநாத், ராஜேஷ், சூர்யா, யாழினி, ஓவியா, இளவரசன், வளவன், வீரா, இளைஞரணி அமைப்பாளர் அருண், மாணவர் கழகம் குறளரசி உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வை நடத்த உறுதுணையாக இருந்தனர்.



**மயிலாப்பூர்:** கழகத் தோழர்கள் மற்றும் தோழமை இயக்கத் தோழர்கள் முன்னெடுப்பில் கடந்த 10 ஆண்டுகளாக மயிலாப்பூர் சுப்பராயன் சாலையில் தமிழர் திருநாள் பொங்கல் விழா கொண்ட்டாங்கள் நடைபெற்று வருகிறது. சனவரி-15 அன்று மயிலாப்பூர் பகுதி மக்கள் பகுதி கழகத் தோழர்கள் இணைந்து சமத்துவ பொங்கல் விழாவாக முன்னெடுத்து வருகின்றனர்.

உழவன் கலைக்குழு பறை இசை ஆட்டம், ARUN ACE Free Ways குழுவினரின் நடனம், SVB ராவணன் குழுவினரின் களரி, சிலம்பாட்டம், VS Boxing Club குழுவினரின் குத்துச்சண்டை ஆட்டம் என பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டது. அண்ணல் அம்பேத்கர் நூலகம் தோழர்கள் வழக்கறிஞர் சரவணன், கண்ணன் விசிக ஆகியோர் கலைநிகழ்ச்சி நிகழ்த்திய தோழர்களுக்கு நினைவுப்பரிசினை வழங்கி, இந்த விழாவை முன்னெடுக்கும் மயிலாப்பூர் பகுதிக் கழகத் தோழர்களை பாராட்டினார்கள்.

கேரம் விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்), உமாபதி (மாவட்டச் செயலாளர்) ஆகியோர் வழங்கினர்.


**விளையாட்டுப் போட்டிகள்:** சனவரி-11 அன்று மயிலாப்பூர் பகுதிக்கழகம் சார்பில் சுப்பராயன் சாலையில் தந்தை பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது. விளையாட்டு போட்டியை டி. கிருஷ்ணமூர்த்தி (124வது வட்ட முன்னாள் செயலாளர்) அவர்கள் துவக்கி வைத்தார். அன்புக்குரிய தோழர் மோகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்) மற்றும் கழகத் தோழர் மாஸ்டர் பிரகாசு, ஜேம்ஸ், அசோக் ஆகியோர் கலந்து கொண்டனர். இராவணன் (மாவட்டத் துணை செயலாளர்), மயிலாப்பூர் கழகத் தோழர்கள் சிவா, மனோகர், பிரவீன், பார்த்திபன், உதயா, பெரியார் முழக்க உமாபதி, கார்த்திக், குமரா,வெ. கார்த்திக், ஸ்டாலின், கௌதம் ஆகியோர் விளையாட்டு போட்டி நிகழ்வை ஒருங்கிணைத்தனர். போட்டோ மதன் அவர்கள் புகைப்படம் எடுத்தார்கள். மயிலாப்பூர் பகுதி குழந்தைகள் பெண்கள் என சுமார் 200-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கழகத் தோழர்கள் மற்றும் தோழமை இயக்கத் தோழர்கள் இணைந்து விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

கழகத் தோழர்கள் சுகுமார், மனோகரன், முழக்கம் உமாபதி, பிரவீன்குமார், பார்த்தா, உதயா, சிவகுமார், குமரா, பாரி சிவகுமார், ஸ்டாலின், கௌதம், ஜெயந்தி, அம்பிகா, வினோத்குமார், சத்யா, பிரமா, தட்சணாமூர்த்தி (வடசென்னை அமைப்பாளர்) மற்றும் திருவல்லிக்கேணி பகுதி கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## மேட்டூரில் தை 1 தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா!

மேட்டூர் நகர கழகத்தின் சார்பாக தை 1 தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் 15.01.2026 காலை 9 மணியளவில் மார்டின் (மேட்டூர் நகர தலைவர்) தலைமையில் நடைபெற்றது. சூரியகுமார் (சேலம் மேற்கு மாவட்ட தலைவர்), கோவிந்தராஜ் (சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர்), டைகர் பாலு (சேலம் மாவட்ட அமைப்பாளர்), குமரப்பா (மேட்டூர் நகரச் செயலாளர்), அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். சேலம் அமுல்ராஜ் இசைக்குழு பறை இசை, பகுத்தறிவு திரைப்பட பாடல்கள் பாடினார்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கழகத் தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் பொங்கல் மற்றும் கரும்பு வழங்கப்பட்டது. சம்பத் (சேலம் மாவட்ட பொருளாளர்), கிருஷ்ணன் (சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்), தங்கதுரை (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), விஜயகுமார் (கொளத்தூர் ஒன்றிய பொறுப்பாளர்), மகளிர் அணி பொறுப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.



புரட்சிப் பெரியார் முழக்கம்
ஆண்டு சந்தா ரூ.300/- | ஐந்தாண்டு சந்தா ரூ.1500/-
தொடர்புக்கு: 15. தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை 600096. | பேச: 63697 76351
முழக்கம் தொடர்பான சந்தேகங்களுக்கு மேற்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.
மின்னஞ்சல் : NEWSDVK@GMAIL.COM

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : January 30, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran